# இந்து இலக்கியங்களில் புராணச் சித்திரிப்புக்கள்: மாணிக்கவாசகரின் திருக்கோவையாரை அடிப்படையாகக் கொண்டது.

ச.நிவேரகா[1]


## ஆய்வுச்சுருக்கம்:

*இந்து சமய மரபுகளை எடுத்துக் கூறும் கருவூலங்களாகத் திகழ்கின்ற புராணங்களுக்கு இந்து மதத்தில் சிறப்பானதோர் இடமுண்டு. இத்தகைய சிறப்பினால் தான் இந்து இலக்கியங்கள் யாவற்றிலும் புராணச் செய்திகள் ஏதோவொரு வகையில் பதிவாகியுள்ளன. இந்து இலக்கியங்கள் எனும் போது, பல இலக்கியங்களைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். அவற்றுள் மாணிக்கவாசகருடைய திருக்கோவையாரில் சித்திரிக்கப்படும் புராணச் செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இறைவனுடைய அருள் பெற்ற அருளாளர்களால் இயற்றப்பட்ட தெய்வப்பாடல்கள் பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அறிவாற் சிவனென ஆன்றோர்களால் பாராட்டப்பெறும் திருவாதவூரடிகள் எனும் மாணிக்கவாசகப் பெருமானால் இயற்றப்பெற்ற திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாவது திருமுறையாக அமைந்து விளங்குகின்றன. திருச்சிற்றம்பலக்கோவையார் என்றும் வழங்கப்படும் திருக்கோவையாரை மணிவாசக அடிகளார் திருவாய் மலர திருச்சிற்றம்பலம் உடையானே தம் கைப்பட எழுதியமைக்கப் பெற்ற ஏற்றமுடையது. கோவைகட்கெல்லாம் மிகத் தொன்மையும் தலைமையும் வாய்ந்ததுமான இக்கோவை சிற்றின்பப் பொருளைத் தந்து நிற்பது போன்று காணப்பெற்றாலும் உண்மையில் இதன் உள்ளுறைப் பொருள் திருவாசகத்துக்கு ஒப்ப பேரின்பக் கருத்து மிக்கது. இப்பனுவலிலே அடிகளார் சிவனோடு தொடர்புடைய புராணச் செய்திகள் பலவற்றைப் பதிவிட்டுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் ஆய்வின் நோக்கத்தினை அடையும் பொருட்டு விபரண ஆய்வு முறை, பகுப்பாய்வு முறை போன்றனவும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பகுப்பறிவாய்வு முறை, தொகுத்தறிவாய்வு முறை போன்றனவும் பயன்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. புராணங்களில் கூறப்பட்டுள்ள இறைவனின் தோற்றப்பொலிவு, அவரின் அட்டவீரச் செயல்கள், பல்வேறு மூர்த்தங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு சிந்தனைகளை மாணிக்கவாசகர், திருக்கோவையாரிலும் பதிவிட்டுச் சென்றுள்ளமையினை இந்த ஆய்வு வெளிப்படுத்தி நிற்கிறது.*


**திறவுச்சொற்கள்:** புராணங்கள், சிவன், திருக்கோவையார், மாணிக்கவாசகர், இந்து இலக்கியங்கள்

[1]இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
s.nivera1995@gmail.com

## அறிமுகம்

வையத்துள் மனிதன் எவ்வாறு வாழ வேண்டும், வாழ்வாங்கு வாழ்வதற்கு அவன் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் என்ன என்பதையெல்லாம் கருப்பொருளாகக் கொண்டு மனித மேம்பாட்டிற்காகத் தோன்றியவையே புராணங்கள். இந்துசமய மரபுகளை எடுத்துக் கூறும் கருவூலங்களாகத் திகழ்கின்ற புராணங்களிற்கு இந்து மதத்தில் சிறப்பானதோர் இடமுண்டு. இவ்வாறு பலவகையிலும் முக்கியத்துவமுடையதாய் விளங்கும் புராணங்கள், ஆன்மாக்களுக்கு அருளும் நோக்குடன் இறைவன் திருவிளையாடலாக நிகழ்த்திய நிகழ்ச்சிகளைச் சாதாரண மக்கள் மனதிலே ஆழப்பதிக்க வல்ல முறையிலே கதை கூறுகின்ற உத்தியைக் கையாண்டு பக்தியைப் பரப்பும் நோக்குடன் அமைக்கப்பட்டன.

உலகளாவிய இலக்கியங்களிலே தெய்வீக பூர்வமானதும், இறை நம்பிக்கை சார்ந்ததும், பக்தி பூர்வமானதுமான இலக்கியங்களாக விளங்குபவை இந்துசமய இலக்கியங்களே. அவற்றுள் இறைவனுடைய அருள் பெற்ற அருளாளர்களால் இயற்றப்பட்ட தெய்வப்பாடல்களான பன்னிரு திருமுறைகளும் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. சைவநெறியில் வாழ்பவர்களுக்கு அடிப்படை நூல்களாக அவை அமைந்து விளங்குகின்றன. இப்பன்னிரு திருமுறைகளில் அறிவாற் சிவனென ஆன்றோர்களால் போற்றப்படுகின்ற மாணிக்கவாசகப் பெருமானால் இயற்றப்பெற்ற திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாவது திருமுறையாக வைத்தெண்ணப்படுகின்றன. அவற்றுள் திருச்சிற்றம்பலக்கோவையார் என்றும் அழைக்கப்படும் திருக்கோவையாரானது கோவைகளுள் மிகத்தொன்மையும் தலைமையும் வாய்ந்தது. இதனுள் காணப்பெறும் துறைகள் உலகத்துறைகள் போன்று இருப்பினும் பேரின்பப் பொருளாகவே, நுணுகி ஆராயும் சிவாநுபவமுடையவர்க்குத் தெற்றென விளங்கும். அகத்திணை சார்ந்த நூல் போன்று அறியப்படினும் இப்பனுவலிலே பல புராணச் செய்திகளை ஆங்காங்கே காணமுடிகின்றது.

## ஆய்வின் நோக்கம்

புராணங்கள் தொன்று தொட்டு மக்களால் மதிக்கப்பட்டு வருகின்றன. இப்புராணங்களிற்குப் பின் தோன்றிய இந்து இலக்கியங்கள், இவற்றில் காணப்பட்ட தொன்மங்களைப் பயன்படுத்திக் கொண்டதை இலக்கிய வரலாறு உரைக்கின்றது. அந்தவகையில் எட்டாந் திருமுறையாக விளங்கும் மாணிக்கவாசகரது திருச்சிற்றம்பலக்கோவையாரில் சித்திரிக்கப்பட்டுள்ள சிவனோடு தொடர்புடைய புராணச் செய்திகளை ஆராய்வதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

இது ஒரு விவரண ஆய்வாக அமையும். ஆய்வின் நோக்கத்தினை அடையும் பொருட்டு பகுப்பாய்வு முறையும், பொருத்தமான சந்தர்ப்பங்களில் பகுப்பறிவாய்வு முறை, தொகுத்தறிவாய்வு முறை போன்றனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**புராணம்**

இந்து சமயம் பற்றிய விளக்கத்திற்குத் துணைபுரியும் சமய இலக்கிய வரிசையில் புராணங்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. வேதங்களை அடுத்து முக்கியத்துவம் பெறுபவை புராணங்களே எனில் மிகையில்லை. புராணம் என்ற சொல்லுக்குப் பழமை என்று பொருள். ''புராதனக் கதைகள்'' எனவும் கூறலாம். புராணம் என்கிற வடசொல் புரா-நவ என்ற வேர்களிலிருந்து பிறந்தது. இதன் பொருள் பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய் உள்ளது என்பர். புராணங்களின் முக்கிய பண்புகளில் ஒன்று அவை புராதனமானவை என்பதாகும். புராதனமான எதுவும் புராணத்தின் பாற்படுவதோடு புராணம் வாழ்கையின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் ஆன்மீக உணர்வைப் பெறுவதற்கான சமயம், தத்துவம், யோகம் போன்றவற்றைப் பற்றிய உரையாடல்கள் நிரம்பிய அறிவுக் கருவூலமாகவும் புராணங்கள் திகழ்கின்றன.

புராணங்களுக்கு ஐவகைப் பண்புகள் கூறப்படுகின்றன. இவை பஞ்சலட்சணங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், மனுவந்தரம், வம்சானுசரிதம் என்பனவே அவை. புராணங்கள் மொத்தம் பதினெட்டு ஆகும். அவற்றில் சிவபுராணம் பத்து. விஷ்ணு புராணம் நான்கு. பிரம்ம புராணம் இரண்டு. அக்கினி மற்றும் சூரியன் தலா ஒரு புராணம் என்று பதினெட்டுப் புராணங்களும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இப்புராணங்களின் செல்வாக்குத் தென்னாட்டுச் சமய மரபிலும் பிரதிபலித்தது. இப்புராண மரபை அடியொற்றி எண்ணற்ற தல புராணங்கள் எழுச்சி பெற்றன. சிவனது அட்ட வீரட்டங்களைக் கூறும் புராண நிகழ்ச்சிகள் நிகழ்ந்த இடங்கள் என்ற வகையில் தென்னாட்டில் பல தலங்கள் எழுச்சி பெற்றன. பக்தியை மக்களிடையே பரப்புவதற்கு இத்தகைய புராணக்கதைகள் பெரிதும் உதவின. இப்புராண மரபின் தாக்கம் தென்னாட்டுச் சமய இலக்கியங்களிலும் காணப்படக் கூடியது. சமய உண்மைகளை நிறுவுவதற்குச் சைவ நூல்கள் புராணங்களைச் சான்றாகக் கொள்கின்றன. திருமுறைகளிலும் புராணச் சிந்தனைகள் காணப்படுகின்றன (கோபாலக்கிருஷ்ண ஐயர்,ப.,1992:65).

## திருக்கோவையார்

அகப்பொருட்டுறைகளைப் பொருள் தொடர்பு அமையும் வண்ணம் ஒரு கோவைப்பட அமைத்துப் பாடப்பெறுவது கோவை என்னும் பிரபந்தமாகும். அகத்துறைகளை நிரல்படக் கோர்த்து அமைக்கப் பெறுதலின் கோவை என்பது காரணப்பெயர். தமிழ் மொழிக்கே சிறப்பாகவுரிய பனுவல்களுள் அகப்பொருட் கோவையும் ஒன்றாகும். அத்தகைய கோவைகளுள் மிகத் தொன்மையும் தலைமையும் வாய்ந்தது திருக்கோவையார். இதற்குத் திருச்சிற்றம்பலக்கோவையார் என்றும் பெயர் உண்டு. முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் உலகெலாம் உய்ய ஆனந்தத் திருக்கூத்தியற்றியருளும் திருவருள் நிலையமாகிய தில்லைத் திருச்சிற்றம்பலத்தைப் பரவிப் போற்றும் முறையில் அமைந்த அகத்திணைக் கோவையாதலின் இப்பெயர் பெற்றது. பிற கோவைகளெல்லாம் பாட்டுடைத் தலைவன் பெயரோடு இணைந்தோ, வேறு பெயர்களோடு இணைந்தோ நின்று கோவையாகக் கூறப்பெறினும் இந்நூல் மட்டும் இதன் தொன்மையும் சிறப்பும் கருதி ''திரு'' என்னும் அடைமொழியும், சிறப்புப் பொருளைத் தரும் ''ஆர்'' விகுதியும் பெற்றுத் திருக்கோவையார் எனப் போற்றப் பெறுகின்றது. ''*பாவை பாடிய வாயால் கோவை பாடுக*'' என்று இறைவன் கட்டளையிட, அவர் மொழிப்படி இத்திருக்கோவையாரை மாணிக்கவாசகர் பாடினார் என்பர்.(வாழ்வியற் களஞ்சியம்:தொ.10:387.) திருவாசகப் பனுவலைப் போன்று இத்திருக்கோவையும் வாதவூரடிகளது மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனாகத் திகழ்தலால் இதனைக் கோவைத் திருவாசகம் எனவும் சான்றோர் சிறப்பித்துப் போற்றியுள்ளார்கள்.

தமிழ்நாட்டுத் தலைவன், தலைவி எனும் இரு பிரிவுகளிலே வைத்து 25 கிளவிக் கொத்துக்களாக வகுத்து 400 துறைகளில் அமைந்த செய்யுட்களில் கதை போன்று இந்நூல் எடுத்துக் கூறிச் செல்கின்றது. பலதரப்பட்டவர்களும் தத்தம் நோக்கங்களிற்கு ஏற்றவாறு பயன்படுத்தும் வகையில் இந்நூல் வளம் மிகுந்து மிளிர்கின்றது. அத்துடன் தலைவன், தலைவியருக்குரிய அகத்துறைப் பொருளைப் புறத்தே காட்டி, ஆன்மா ஆண்டவனுக்குரிய உயர் துறைப் பொருளை அகத்தே காட்டும் இச்சிறந்த நூலிலே வெளிப்படையாகக் காணப்படும் சிற்றின்பத்தைப் பேரின்பமாகக் கொள்ளுதல் வேண்டும். மற்ற நூல்களிலே துறைகளனைத்தையும் ஆன்மாவை நாயகியாகவும், இறைவனை நாயகனாகவும் வைத்தே அமைக்கப் பெற்றிருக்கும். ஆனால் இந்நூலிலே நாயகி சிவமெனவும், நாயகன் ஆன்மா எனவும் பாவனை செய்யப்படுகின்றனர். இன்பசுகம் நாயகியும் அதனைப் பெறுவான் நாயகனுமாகிச் சுவையும் நாவும் போல அவர்களிருவருமிருத்தலால் பேரின்பப் பொருளாகிய சிவத்தை நாயகி என்றும் அதனை நுகரும் ஆன்மாவை நாயகன் என்று சொல்லுவதே பொருத்தமுடையதாகும் எனக் கூறப்படுகின்றது (இந்துக் கலைக்களஞ்சியம்,தொ.,7:325).

குமரகுருபர சுவாமிகள் திருக்கோவையாரின் பெருமை அறிந்து,

பைந்தமிழ் நவின்ற செந்நாப்புலவன்
ஐந்திணை யுறுப்பினாற் பொருள் பயக்கும்
காமஞ்சான்ற ஞானப் பனுவற்குப்
பொருளெனச் சுட்டியவொரு பெருஞ்செல்வ''

என வியந்து கூறியுள்ளார். எனவேதான் திருக்கோவையார் வெளிப்பார்வைக்குச் சிற்றின்ப நூல் போலத் தோன்றிய போதிலும் உண்மையில் திருவாசகத்திற்கு ஒப்பப் பேரின்ப நூலாகும்.

## திருக்கோவையாரில் சிவன்

சிவன் தொன்மைக்கடவுள். இக்கடவுள் வழிபாடு பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. சிவன் முன்னைப் பழம் பொருட்கும் பழம் பொருளாவான் என்று திருவாசகம் சுட்டுகின்றது. சிவனோடு ஒப்பாக உள்ள கடவுள் எங்கு தேடினும் இல்லை. சிவன் தென்னாட்டில் ஆட்சி செலுத்துபவன் என்றாலும் எந்நாட்டவருக்கும் உரியவன் என்று மாணிக்கவாசகர் குறிப்பிடுவார்.

திருக்கோவையாரில் சிவபிரானோடு தொடர்புடைய பல புராணச் சித்திரிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. அந்தவகையில் சிவனின் திருவுருவச் சிறப்பு, சிவன் நிகழ்த்திய அட்ட வீரச் செயல்கள், அவரது தன்மை, திருநாமச் சிறப்பு ஆகியன போற்றப்பட்ட தன்மையினை காணக்கூடியதாவுள்ளது.

## சிவனுடைய திருவுருவச் சிறப்பு

சிவபிரானது திருவுருவம் பற்றிப் புராணங்களில் கூறப்பட்ட செய்திகளை மாணிக்கவாசகர் திருக்கோவையாரில் பலவாறு சுட்டிச் செல்கின்றார். ஒளிபொருந்தியவர், செம்பொன் மேனியினை உடையவர், சோதி வடிவானவன் என்றெல்லாம் சிவன் போற்றப்படுகின்றார். இதனை அவர்,

''சிவந்த பொன் மேனி மணிதிருச்
சிற்றம்பலமுடையான்'' (திரு.கோ:361)

''அழல் வாய் அவிரொளி அம்பலத்து
ஆடும் அம் சோதி......'' (திரு.கோ:94)

போன்ற பாடல்கள் வழி உணர்த்துகிறார். அத்துடன் செழுமை பொருந்திய பவளம் போன்ற நிறத்தையுடைய திருமேனியைக் கொண்டவர் என்பதனை,

''கொழும்பவள நிறவரை மேனியன்'' (திரு.கோ:260)

என்ற பாடலினூடாகக் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

மேலும் இறைவனின் சடாமுடியினை வாதவூரடிகள் போற்றுகையில், ''ஆரூர் சடைமுடி''(398), ''ஒளிரும் சடைமுடியோன்'' (193), ''மின் அங் அலரும் சடைமுடி'' (172), ''நன்மாச் சடைமுடி''(265), ''தாரென்ன வோங்கும் சடைமுடி'' (56) என்றெல்லாம் போற்றிப்பாடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிவனுக்குச் சிறப்பாயுள்ளது நெற்றிக்கண். ஆகவே சிவன் முக்கண்ணனெனும் கருத்துடைய ''திரிநேத்திரன்'', ''திரிலோசனன்'' போன்ற அடிகள் புராணங்களில் இடம்பெறுகின்றன. இதனையொத்து திருக்கோவையாரிலும் இறைவன் மூன்று கண்களை உடைய சிறப்புடையவன் என்பதை மாணிக்கவாசகர் பல இடங்களில் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். இதனை,

''நிருத்தம் பயின்றவன் சிற்றம்
பலத்து நெற்றித்தனிக்கண்'' (திரு.கோ:62)
''மத்தகம் சேர் தனி நோக்கினன்'' (திரு.கோ:106)

போன்ற பாடல்களினூடாகவும், சந்திரன், சூரியன், அக்கினி ஆகிய மூன்று சுடரையும் மூன்று கண்களாகப் பெற்றவன் என்பதனை,

''இமையாத முக்கண்
மூவரின் பெற்றவர்'' (திரு.கோ:62)
''நற்பகல் சோமன் எரிதரு
நாட்டத்தன் தில்லையன்ன'' (திரு.கோ:168)

போன்ற பாடல்களினூடாகவும் உணர்த்திச் செல்கின்றார்.

சிவனின் கழுத்தும் தனிச்சிறப்பு வாய்ந்தது. இது நீலநிறம் பொருந்தியது. நஞ்சுண்ட வேளை கழுத்திற் கறை படிந்து விட்டபடியால் இறைவன் நீலகண்டன் ஆகின்றான். இச்சந்தர்ப்பத்தில் இறைவன் அருந்திய விடமே கழுத்தில் தங்கி, அதற்கு அழகை அளித்ததெனவும் புராணங்கள் கூறுகின்றன. இத்தகைய சிறப்புப் பொருந்திய சிவபிரானது கழுத்தினை வாதவூரடிகள்,

''புலியூர் அரன்மிடற்றின்
மாண்பதென் றேஎண வானின்'' (திரு.கோ:323)
''கருமால் விடையுடை யோன் கண்டம்
போற் கொண்டல் எண்டிசையும்'' (திரு.கோ:326)
''அருந்தும் விடம் அணி யாம்மணி
கண்டன் மற் அண்டர்க்கெல்லாம்'' (திரு.கோ:272)
''முன்னோன் மணிகண்டம் ஒத்தவன்'' (திரு.கோ:210)
''பைந்நாண் அரவன் படுகடல்

வாய்ப்படு நஞ்சமுதாம்
மைந்நாண் மணிகண்டன் மன்னும்'' (திரு.கோ:81)

போன்ற பாடலடிகளினூடாகப் புலப்படுத்திச் சென்றுள்ளார்.

**அர்த்தநாரீஸ்வரர் வடிவம்**

இறைவனை மங்கை பங்கனாகவும் புராணங்கள் சித்திரிக்கின்றன. சிவன் சக்தியோடிணைந்த தத்துவக்கருத்தை முதலில் கூறும் இலக்கியங்கள் புராணங்களே. புராணங்களில் கூறிய உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு மாணிக்கவாசகர் தம் பாடல்களில் சிவபெருமானை அர்த்தநாரீஸ்வரராகக் கூறியுள்ளார்.

''உடையாளையும் மேனி வைத்தான்'' (திரு.கோ:257)
''உமை கூர் பங்கு அம்பலவன்'' (திரு.கோ:100)
''ஓராகம் இரண்டெழிலாய் ஒளிர்
வோன் தில்லை ஒண்ணுதல்'' (திரு.கோ:194)
''சிலையொன்று வாணுதல் பங்கன் சிற்
பலவன் கயிலை'' (திரு.கோ:101)
''மாதிடம் கொண்டு அம்பலத்து நின்றோன்'' (திரு.கோ:138)
''யாழார் மொழி மங்கை பங்கத்து'' (திரு.கோ:93)
''அயல்வளர் மேனியன் அம்பலத்
தான் வரைத் தண்புனத்தே'' (திரு.கோ:117)

போன்ற பாடல்கள் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.

**அட்டவீரச் செயல்கள்**

சிவனின் வீரச் செயல்கள் பற்றிப் புராணங்கள் பெரிதும் விளக்கிக் கூறுகின்றன. இவற்றுள்ளே தலைசிறந்தன எட்டுச் செயல்கள். அட்ட வீரட்டம் என்பது சிவனது எட்டு வீரச் செயல்கள் எனப் பொருள்படும். இவ் எட்டு வீரச் செயல்களாக,

1. காமனை எரித்தது.
2. யமனை உதைத்தமை.
3. திரிபுரத்தை எரித்தமை.
4. தக்கன் யாகத்தை அழித்தமை.
5. அந்தகாசுரனை அழித்தமை.
6. பிரமன் சிரம் கொய்தமை.
7. சலந்தாசுரனைச் சங்கரித்தது.
8. யானையை உரித்தது.

போன்றவை கூறப்படுகின்றன. இச்செயல்களோடு தொடர்புடைய கதைகள் பல்வேறு புராணங்களில் இடம்பெற்றுள்ளன. இந்த அட்டவீரட்டச் செயல்கள் தமிழ்நாட்டில் எட்டுத் தலங்களில் சிவனால் நடத்திக் காட்டப்பட்டன என்று கூறப்படுகின்றது. அந்த அட்டவீரட்டத் தலங்களை,

“பூமன் சிரங்கண்டி அந்தகன் கோவல், புரம் அதிகை
மாமன் பறியல், சலந்தரன் விற்குடி, மாவழுவூர்
காமன் குறுக்கை, யமன் கடவூர், இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே”

என்னும் பழம்பாடல் அறிவித்துள்ளது.

**1. காமனை எரித்தமை.**

சிவன் காமனை அழிப்பதற்கு நேரிட்ட சம்பவங்களைப் புராணங்கள் விபரமாகக் கூறுகின்றன. தாரகன் என்ற அசுரனால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் பெரும் இன்னலுற்றனர். சிவனுக்கும் உமைக்கும் பிறக்கும் மைந்தன் ஒருவனாலேயே இவ்வசுரனுக்குரிய முடிவு ஏற்படும் என்பதால் தேவர்கள் சிவன் உமை ஆகியோருக்கு இடையே இணைப்பை ஏற்படுத்த முயல வேண்டுமென பிரமன் கூறவே, தேவர்கள் உடனே காமனை இப்பணியில் ஈடுபடச் செய்தனர். காமன் கைலாசத்திற்குச் சென்ற வேளை சிவன் ஆழ்ந்த யோகத்தில் இருந்தார். காமன் தமது மன்மத பாணங்களை ஏவினான். இதனால் வெகுண்ட சிவன் தனது நெற்றிக்கண்ணைத் திறந்த பொழுது அதிலிருந்து வெளிக்கிளம்பிய அக்கினி மன்மதனை எரித்துச் சாம்பராக்கியது. (கோபாலகிருஷ்ணஐயர்.ப:2010:508) இவ்வீரச் செயலை திருக்கோவையாரில்,

“காமரை வென்ற கண்ணோன்” (திரு.கோ:164)
“உறுங்கண்ணி வந்த கணையுர
வோன் பொடியாய் ஒடுங்கத்
தெறுங்கண்ணி வந்த சிற்றம்பலவன்” (திரு.கோ:95)
“காமன் எய்த அலரைப் பொறாது அன்று
அழல விழித்தோன்” (திரு.கோ:367)

போன்ற அடிகளினூடாக மாணிக்கவாசகர் சுட்டிக்காட்டுகின்றார்.

**2. யமனை உதைத்தமை.**

மார்க்கண்டேயர் வரலாறு சைவசமயத்தில் முக்கியத்துவமுடையதொன்றாகும். மார்க்கண்டேயர் சிறந்த சிவபக்தர். பதினாறு வயது வரை வாழ்வதற்கு விதிக்கப்பட்ட அவரது உயிரைக் கவர்வதற்கு வந்த யமனை சிவன் காலால் உதைத்து சம்ஹாரம் செய்தார். புராணங்களில் சிவனுக்குரிய பெயர்களான “காலதஹனர்”, “அந்தகாந்தகிருத்”

ஆகியவற்றிலிருந்து சிவன் யமனைச் சம்ஹாரம் செய்தவர் என்ற கருத்து ஓரளவு பெறப்படுகின்றது. (கோபாலகிருஷ்ணஐயர். ப:2010 :511) இச்செய்தியினை வாதவூரடிகள் பதிவிடுகையில்,

''மாற்றேன் எனவந்த காலனை
ஓலம் இட அடர்ந்த கோற்றேன்'' (திரு.கோ:150)
''காலன் புகுந்து அவியக்கழல்
வைத்தெழில் தில்லை நின்ற மேயன்'' (திரு.கோ:286)
''முழுதும் சிதையத்
தெறுவலக் காலனைச் செற்றவன்'' (திரு.கோ:227)

என்றவாறு பதிவிட்டுச் சென்றுள்ளார்.

**3. சலந்தரனைத் தடிந்தமை.**

''கம்பம் சிவந்த சலந்தரன்
ஆகம் கறுத்ததில்லை நம்பன்'' (திரு.கோ:209)

என்ற பாடலினூடாக சலந்தரனைச் சங்கரித்த புராணச் செய்தியினை மாணிக்கவாசகர் வலியுறுத்திச் சென்றுள்ளமையைக் காணலாம். சலந்தரன் என்ற அசுரன் சகல வல்லமைகளும் வாய்க்கப் பெற்றவனாய் தேவர்களைத் துன்புறுத்தி வந்தான். ஒருமுறை சிவனிடம் தனது வீரத்தைக் காட்ட கைலாசம் சென்றான். சிவன் ஒரு வழிப்போக்கனைப் போல் மாறுவேடந்தாங்கி வழியில் அசுரனைச் சந்தித்து, நிலத்தில் ஒரு சக்கரத்தைக் கீறி, அதனைத் தூக்கும் படி அசுரனிடம் கூறவே, அசுரன் தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து அச்சக்கரத்தை நிலத்திலிருந்து பெயர்த்தெடுத்து தலைக்கு மேல் தூக்க முயன்றனன். சக்கரத்தின் பாரத்தைத் தாங்க முடியாத அசுரன் அதனைத் தன் தலையில் வைக்க முயன்ற பொழுது சக்கரம் அவனது உடலை இரண்டாகப் பிளந்தது. ஜலந்தரனை இவ்வாறு சம்ஹாரம் செய்தபடியால் சிவனுக்கு ''ஜலந்தரஹரமூர்த்தி'' என்ற பெயர் சிறப்பாக அமைந்தது.

**4. தக்கனை அழித்தல்.**

தக்கன் பிரமனின் மானச புத்திரர்களுள் ஒருவன். தக்கன் சிவனைப் பார்க்க கைலாயம் சென்றான். அங்கு பூதகணங்களால் திருப்பி அனுப்பப்பட்டதால் கோபத்துடன் திரும்பினான். பின்பு வேள்வி ஒன்றைத் தொடங்கி திருமாலைத் தலைவனாக்கிச் சிவனைப் புறக்கணித்தான். இதனால் கோபங்கொண்ட சிவன் வீரபத்திர வடிவில் தக்கனைத் தண்டித்தான் என்பது புராண வரலாறு. இந்நிகழ்வை,

''தக்கனாரன்றே தலையிழந்தார் தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீபற மடிந்தது வேள்வியென் றுந்தீபற''
(திருவா:14:15)

எனத் திருவாசகத்தில் மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு திருக்கோவையாரிலும்,

"தக்கின்று தக்கன் முத்தீக்
கெடுத்தான் கெடலில் தொல்லோன்" (திரு.கோ:226)

"தக்கன் வேள்வி மிக்க
எரியார் எழில் அழிக்கும் எழில் அம்பலத்தோன்" (திரு.கோ:340)

"முன் தகர்த்து எல்லா இமையோரையும்
பின்னைத் தக்கன் முத்தீச்
சென்று அகத்து இல்லா சிதைத்தோன்" (திரு.கோ:92)

என்ற பாடல்களின் வழி புலப்படுத்திச் செல்கின்றார்.

**5. யானைத் தோலை உரித்தல்.**

சிவன் யானை உருவைக் கொண்ட கஜாசுரனைக் கொன்று தோலை உரித்து அதனை ஆடையாகப் போர்த்தியதாக புராணங்கள் கூறுகின்றன.

"மத்தக் கரியுரியோன் தில்லையூரன்" (திரு.கோ:388)

"கருங்கடம் மூன்றுகு நால்வாய்க்
கரியுரித்தோன் கயிலை" (திரு.கோ:55)

"தில்லையான் அன்று உரித்ததன்ன
கவளத்த யானை கடிந்தார்" (திரு.கோ:112)

என்ற பாவரிகளினூடாக மாணிக்கவாசகரும் இப்புராணச் செய்தியினை எடுத்துக் காட்டியுள்ளார்.

**6. திரிபுரத்தை எரித்தல்.**

பிரமனிடம் வரம் பெற்ற மூன்று அசுரர்கள் உலோகத்தினாலான முப்புரங்களை அமைத்து தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் இன்னல் விளைவித்தனர். இம்மூன்று புரங்களும் ஒரே வரிசையில் வரும் சமயத்திலே அழிக்கப்பட முடியும் என்ற நிலை காணப்படவே, இவ்வசுரர்கள் மனம் போன போக்கில் உலவித் திரிந்தனர். இறுதியில் தேவர்கள் சிவனிடம் தஞ்சம் புகுந்து அருள்புரியும் படி வேண்டவே, சிவன் புதிய ஆற்றல் பெற்று இம்முப்புரங்களையும் அழித்தான். விஷ்ணுவை அம்பாகவும், வேதங்களை வில்லாகவும், சவிதாவை வில்லின் நாணாகவும், பிரமனை தேர்ச்சாரதியாகவும் கொண்டு சிவன் திரிபுர சம்ஹாரம் செய்தார். இவ்வரலாறு புராணங்களில் மிக விரிவாக இடம்பெறுகின்றது. முப்புரங்களை எரித்தபடியினால் சிவனுக்கு "திரிபுராந்தகர்" என்ற பெயர் வழங்கலாயிற்று. இத்திரிபுரம் எரித்த செய்தியினை திருக்கோவையார்,

"செயிரொன்று முப்புரம் செற்றவன்" (திரு.கோ:18)

"எயிற்குலம் மூன்று இரும் தீ எய்த

எய்தவன்'' (திரு.கோ:36)

''இரும்புறு மாமதில் பொன் இஞ்சி
வெள்ளிப் புரிசையன்றோர்
துரும்புறச் செற்ற கொற்றத்து எம்பிரான்'' (திரு.கோ:167)

''முப்புரங்கள் வீப்பான் வியன் தில்லையான்'' (திரு.கோ:312)

''வில்வினை மேருவில் வைத்தவன்'' (திரு.கோ:26)

என்றவாறு உணர்த்தி நிற்கின்றது.

**7. பிரமன் தலையைக் கொய்தமை.**

பிரமன் படைப்புக் கடவுள். ஒருமுறை பிரமன் தானும் சிவனோடு சமநிலையில் இருப்பதாகச் செருக்குற்ற வேளையில், பிரமனது செருக்கினை அடக்க, சிவன் பைரவர் கோலங்கொண்டு, ஐந்தாவது தலையை சம்ஹாரம் செய்தாரென்பது வரலாறு. இதனை,

''புத்தேளிர் நாப்பண்
சிரம் அன்று அயனைச் செற்றோன்'' (திரு.கோ:321)

''அன்று உகிரால்
சிரம் அங்கு அயனைச் செற்றோன்'' (திரு.கோ:371)

என்ற திருக்கோவையார் அடிகள் சுட்டி நிற்கக் காணலாம்.

**8. அந்தகாசுரனை அழித்தமை.**

சிவனது பைரவ வடிவம் உக்கிரத்தோற்றமாகும். இவ்வடிவம் பௌராணிக மரபின்படி அந்தகாசுரனை அழித்த மூர்த்தத்தோடும் தொடர்புடையது. அந்தகாசுரன் தேவர்களை வதைத்ததோடு உமையையும் கவர்வதற்கு முயன்றான். சிவன் பைரவ வடிவேற்று இவ்வசுரனை சம்ஹாரம் செய்தான் எனப் புராணம் கூறும். அந்தகாசுரனை பைரவர் காய்ந்த இடம் திருக்கோவலூராகும்.

''அவுணரிற் கள்வனான அந்தகற் காய்ந்து மூன்று
புவனமுங் கவலை தீர்த்த புண்ணியன் புரமீதாகும்''
(திருவி.பு:65:16)

என்று திருவிளையாடற் புராணம் குறிப்பிடுகின்றமை இங்கு நோக்கத்தக்கது.

### சிவபிரான் தன்மை

புராணங்களில் கூறப்பட்டுள்ள இறைவனின் தோற்றப்பொலிவு, அவன் நிகழ்த்திய அட்டவீரச் செயல்கள், அவனின் பல்வேறு மூர்த்தங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இறைவன் பல தன்மையினன் என்பதனை உணர்ந்து கொள்ள முடியும். அவ்வாறு இறைவன் அச்சத்தைத் தீர்ப்பவர், கருணை புரிபவன், அழிவில்லாத தன்மையினன்,

இன்பத்தைத் தருபவர், எல்லோராலும் அறியப்படுபவர், ஒப்பில்லாதவர், மேலானவர், வாக்குக்கு எட்டாதவர் என்றெல்லாம் போற்றப்படுகின்றார். இதனையே மாணிக்கவாசகர் திருக்கோவையாரிலும் பதிவிட்டுச் சென்றுள்ளமையினைக் காணக்கூடியதாவுள்ளது. அந்தவகையில் சிவபிரான் அச்சத்தைத் தீர்ப்பவர் என்பதனை,

"காதரம் தீர்த்தருளும்
அயல்வளர் மேனியன்" (திரு.கோ:117)

என்ற அடிகளினூடாகவும், பக்தர்களுக்கு கருணை புரியும் தன்மையினன் என்பதனை,

"நஞ்சம் அஞ்சி மறுகி விண்ணோர்
பணியக் கருணை தரும்பரன்" (திரு.கோ:195)

எனவரும் பாடலினூடாகவும் சுட்டிச் சென்றுள்ளார்.

இறைவன் எந்தக்காலத்தும் நிலைபெற்று நிற்கும் அழிவில்லாத தன்மையினன் எனவும் கருதப்படுகின்றான். இதனை,

"விண்ணை மடங்க விரிநீர்
பரந்து வெற் புக்கரப்
மண்ணை மடங்க வரும் ஒரு
காலத்து மன்னி நிற்கும்
அண்ணல்…." (திரு.கோ:75)

என்ற பாடல் உணர்த்திச் செல்கின்றது.

"அடற்களி யாவர்க்கும் அன்பர்க்கு
அளிப்பவன் துன்ப இன்பம் பட" (திரு.கோ:297)

என்ற அடிகளினூடாக இறைவன் இன்பத்தைத் தருபவன் என்கிறார். எல்லோராலும் நன்கு அறியப்பட்டவர் என்பதனை,

"மண்ணுழை யாவும் அறிதில்லை
மன்னனது இன்னருள் போல்" (திரு.கோ:347)

என்ற வரிகளினூடாகவும், சிவபெருமான் தனக்கொப்பார் மற்றொருவர் இல்லாதவர் என்பதனை,

"தாமே தமக்கு ஒப்பு மற்றில்லவர்" (திரு.கோ:228)

என்ற அடிகளும் உணர்த்தி நிற்கின்றன. மேலும் இறைவன் வாக்குக்கு எட்டாதவர் என்பதனை,

"மத்தகம் சேர்தனி நோக்கினன்
வாக்கிறந்து ஊறமுதே" (திரு.கோ:106)

எனவரும் பாடலினூடாகவும் அறியலாம். இதுபோன்று சிவனின் மேலும் பல உயரிய தன்மைகளை மணிவாசகர் திருக்கோவையாரில் வலியுறுத்திச் சென்றுள்ளமையினைக் காணமுடிகின்றது.

## முடிவுரை

இறைவன் புலன்களுக்கு அப்பாற்பட்டவனாகக் காணப்பட்டாலும் அவன் மீது மிகுந்த பக்தி கொள்ளும் சாதாரண மக்கள், அவனை புலன்களுக்கு அப்பாற்பட்டவனாகப் பாவனை செய்து கொள்ளுவது கடினமானதாகும். வேத ஆகமங்களில் சித்திரிக்கப்பட்ட இறைவனானவன் பாமர மனிதனின் சாதாரண அறிவுக்கு எட்ட முடியாத நிலையில் உள்ளான். ஆனால் புராணங்கள், இறைவனை அணுகி அன்பினால் வழிபடக் கூடிய வகையில் எளிமையாக்கி, மனித உணர்வுகளின் வழி புரிந்து கொள்ளக் கூடிய முறையில் சித்திரித்துக் காட்டுகின்றன. இதன் காரணமாகப் புராணங்களில் இறைவன் உருவமும், உறவுகளும், இருப்பிடமும், வாகனமும் பெறுகின்றான்.

சைவநெறியில் வாழ்பவர்களுக்கு அடிப்படை நூல்களாகத் திகழும் தேவாரத் திருமுறைகள் தோன்றிய காலத்திலே வடமொழிக் கருத்துக்கள் தமிழகத்தில் பரவலாயின. புராணங்கள் விரித்துக் கூறும் இறைவனது எழிற் கோலங்கள், அட்ட வீரட்டங்கள், இறைவனது மூர்த்தங்கள் ஆகியவற்றைத் திருமுறைகள் விரித்துக் கூறுமளவிற்கு வேறெந்த இலக்கியமும் கூறவில்லையெனலாம். புராணங்கள் கூறும் வர்ணனைகளையும் பல நிகழ்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்ட திருக்கோலங்களில் இறைவனை வழிபடும் மரபைத் திருமுறைகளே எடுத்தியம்புகின்றன. அந்தவகையில் தான் எட்டாந்திருமுறையில் ஒன்றாக விளங்கும் திருக்கோவையார், வெளிப்பார்வைக்குச் சிற்றின்ப நூல் போலத் தோன்றினும் இதனை ஆழமாக நோக்கின் திருவாசகத்துக்கு ஒப்பப் பேரின்ப நூல் என்றே கூறலாம். அத்தகைய தெய்வ நூலாக விளங்கும் இப்பனுவலிலே மாணிக்கவாசகர் புராணச் செய்திகளை பெருமளவில் பயன்படுத்திச் சென்றுள்ளமையினைக் காணமுடிகின்றது எனலாம்.

## உசாத்துணை


குமரகுருபரன்பிள்ளை, அ.வ., (உ.ஆ), (1952), திருக்கோவையார், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம்.

கோபாலகிருஷ்ண ஐயர், ப., (1992), இந்துப்பண்பாட்டு மரபுகள், வித்தியா வெளியீடு, யாழ்ப்பாணம்.

கோபாலகிருஷ்ண ஐயர், ப., (2010), இந்து விக்கிரகக்கலை மரபில் சிவவடிவங்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

சிவலிங்கனார், ஆ., (உ.ஆ), (1992), எட்டாந் திருமுறை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

செங்கல்வராயப்பிள்ளை, வ.சு., (1970), திருக்கோவையார் ஒளிநெறி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

சோமசுந்தரனார், பொ.வே., (1978), திருக்கோவையார் பழைய உரையும் புதிய விளக்கமும், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

வெள்ளைவாரணன், க., (1962), பன்னிரு திருமுறை வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

வசந்தகுமார், இராச., (பதி), (2016), திருக்கோவையார்-எட்டாந் திருமுறை(11), பன்னிரு திருமுறை ஆய்வு மையம், கற்பகம் பல்கலைக்கழகம்.